முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1047

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.08.2022**, வியாழக்கிழமை

1. ஞான ஜோதியே அரங்கா வாழ்க
ஞான கீர்த்தியே தேசிகா வாழ்க
வானவர்கள் மெச்சுகின்ற தர்மம் வழங்கும்
வள்ளலே வாழுகின்ற ஞானியே வாழ்க வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 26 நாள், 11.08.2022 வியாழக்கிழமை)
தாழ்விலா அரங்கனின் தான தருமமே
தரணியை பேரிடரில் இருந்து பாதுகாத்து மீட்டருளும்
3. அருளாக அரங்கன் தருகின்ற உபதேசமே
அகிலத்தாரை ஞான வழிக்கு அழைத்துச் செல்லும்
செல்லவே அரங்கன் தரும் தீட்சையே
சித்திகளை வழங்கும் தவ பயிற்சியாக மாறும்
4. மறுப்பின்றி அரங்கன் தருகின்ற அன்னதானமே
மக்களை பசி பிணி
பிறவிப் பிணியிலிருந்தும் நீக்கி
பேரானந்தகதி தந்து அருளும்
5. அருளாக அறமாக அரங்கனுக்கு சக்தியை
ஆறுமுகன் யான் தொடர்ந்து தந்து வர
வரங்கள் வேண்டுமாயின் உலகோரே
வணங்கி அரங்கன் குடில் நோக்கி வரவேண்டும்
6. வேண்டி வேண்டி அரங்கன் திருவடி பற்றி
விடாது ஞானம் பயின்று வர
தொண்டு மூலமும் தர்மத்தின் மூலமும்
தேசிகன் தருகின்ற தீட்சை மூலமும்
7. மூலமாக உலகோர் முழுமை ஞானம் கண்டு
கோலமதாய் சர்வ இடர்களை வென்று குறையில்லாத ஞானவான்களாய் சிறக்க நேரும்
நேர்மைபட அரங்கன் திருவடி பற்றினால் போதும் நிலவுலகை ஆளும் சர்வ பலமும்
ஆறுமுகனார் என் ஆசியும் அருளும் ஐயமற பரிபூரணமாய் பெற்று உலகோர் ஞானியாகநேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–